


ரல்: 4 இசை: 7

விலை

25 காசு


# மறைமலையடிகள்

மறைமலை யடிகளே
நிறைதமிழ் வளர்த்தவர்!
மனங்கொள நினைந்திடுக!–அவரது
மாண்பினைப் புகழ்ந்திடுக!
குறைவறு நூல்பல
நிறைவுறத் தந்தவர்;
குனிதலை நிமிர்த்தியவர்!–செந்தமிழ்க்
குடியினை உயர்த்தியவர்!

துறைமிகு ஆங்கிலம்,
மறைவட மொழியொடு
தூய்தமிழ்ப் பேரறிஞர்!–தனித்தமிழ்
தோற்றிய ஓரறிஞர்!
கறைசெயும் பிறமொழி
முறையறப் புகுத்திய
கயமையை விலக்கியவர்–தமிழினைக்
கசடறத் துலக்கியவர்!

கலக்கமில் அறிவினால்
இலக்கண இலக்கியக்
கடல்கடந் தேறியவர்!–இந்தியைக்
கடிந்துரை வீறியவர்!
நலக்குறை வுறுந்தமிழ்க்
குலந்தழைத் தெழுந்திட
நாள்தொறும் எண்ணியவர்!–உரைதர
நாடெல்லாம் நண்ணியவர்!

அறிவியல் எழுதினார்;
நெறிமுறை கூறினார்;
ஆய்வுசெய் திறமுரைத்தார்–ஆரியர்
அடங்கிட மறமுரைத்தார்!
செறிவுறுங் கருத்தினால்
முறிவுற மடமையைச்
சினத்தொடு தாக்கியவர்–குலவெறிச்
சிறுமையைப் போக்கியவர்.

# தமிழ்ச்சிட்டு

தனித்தமிழ் சிறுவர் கலை இதழ்.

## அம்மா!

அழுதால் பாலை ஊட்டி,
அணிகள் வாங்கிப் பூட்டி,
பழுதில் லாமல் காப்பாள்!
பட்டுச் சட்டை போர்ப்பாள்!

மடியில் தூங்கப் பண்ணி,
முடியை வாரிப் பின்னி,
வெடித்த பூவைச் சூட்டி,
வளர்ப்பாள் அன்பைக் காட்டி!

இடையில் வைத்துத் தாங்கி,
இரவில் காத்துத் தூங்கி,
நடையைக் கற்றுக் கொடுப்பாள்!
நலிவை என்றும் தடுப்பாள்!

பெற்றாள்; காத்தாள் சேயை!
பணிவேன் அன்புத் தாயை!
கற்றுத் தந்தாள் கல்வி!
கண்ணைப் போன்ற செல்வி!

## கடல்.

தம்பி, தம்பி கடலைப் பார்!
துள்ளிக் குதிக்கும் அழகைப் பார்!
வெள்ளைக் குதிரை போலவே
விழுந்து புரளும் அழகைப் பார்!
நீலப் பாயின் மேலேறி
நீட்டிப் படுக்கும் அலையைப் பார்!
கோலக் கடலின் மடிமீதில்
குதித்து விழுகும் அலையைப் பார்!
நீர்க்குள் புரண்டே களைத்துப் போய்
நிலத்தைத் தாவும் அலையைப் பார்!
கரையின் மடியில் புரள்வதைப் பார்;
கடலுள் மீண்டும் உருள்வதைப் பார்!
தம்பி, தம்பி கடலைப் பார்!
துள்ளிக் குதிக்கும் அழகைப் பார்!

பாடல்கள்: துரை-மாணிக்கம்.

# தமிழ்ச்சிட்டு

தனித்தமிழ்
சிறுவர் கலை இதழ்


இன்றைய பயனே நேற்றைய உழைப்பு!
இன்றைய சிறுவர் நாளைய உலகம்!
நன்று செய்வதே நமக்குநல் வாழ்க்கை!
என்றும் அழியாது இருப்பது புகழே!


குரல்-4 | தி.பி.-உ௦௦௧-கும்பம் பெப்-மார்ச்சு-70 | இசை-7.


# பொதுமை உலகம் புதுக்குக இளைஞனே!

*அன்றைய வாழ்வில் அமைதி இருந்தது!*
*நன்றே செய்யும் நாட்டம் இருந்தது!*
*மெய்சொலல் உயர்வெனும் மேன்மை இருந்தது;*
*பொய்சொலல் தீதெனும் போக்கு வாழ்ந்தது!*
*அறியாமை இருந்தது; எனினும் கல்வி*
*நெறியே பெரிதென மக்கள் நினைத்தனர்.*
*வறுமை இருந்தது; எனினும் வாழ்க்கை*
*வெறுமை என்னும் நினைவால், விளைந்ததைப்*
*பங்கிட்டு உண்ணும் பழக்கம் இருந்தது!*
*'ஈ'யென் றிரப்பதை இழிவாய் எண்ணினர்,*
*'கொள்' எனக் கொடுப்பதை உயர்வாய்க் கொண்டனர்.*
*கலைகள் இருந்தன; கயமைகள் இல்லை.*


வெளியீட்டாளர், பொறுப்பாசிரியர்: பெருஞ்சித்திரன்
**தென்மொழி மின் அச்சகம், கடலூர்-1.**

கொலையுங் களவும் இருந்தன வாயினும்
அறமுறை, நடுநிலை—அவற்றைக் குறைத்தன.
வாணிகம் இருந்தது; வாய்மையும் இருந்ததால்
தூணெனத் துரும்பை அளக்கும் வழக்கிலை!
நறுஞ்செயல் யாவும் மிகுத்துநம் தமிழகம்
அறஞ்செய் உலகமாய் அன்றைக் கிருந்தது.

இப்படி இருந்த இனியநம் நாட்டில்
செப்படி வேலைகள் சிறிது சிறிதாய்
மிகுந்து வந்தன! மேற்கிலும் வடக்கிலும்
புகுந்தனர் மாந்தப் புல்லியர் ஒருசிலர்!
வந்தவர் தாமும் வாழ விரும்பினர்!

'மந்திரம்' என்றனர்; 'மாயம்' என்றனர்;
தந்திரம் பலவும் செய்து தமிழரைக்
குலம்பல வாக்கினர்; புதுநெறி கூறினர்;
வலக்கா ரத்தால் வாழ முனைந்தனர்!
'சாதி' புகுந்தது; மிகுந்தது, சழக்கு!
'வேதியர்' என்றும், 'சூத்திரர்' என்றும்
உயர்வும் இழிவும் பலப்பல உரைத்தனர்!
மயர்வற அவற்றை' 'மறை'என எழுதினர்.

'மறைகள்' சொன்னதால் 'மறையோர்' ஆயினர்!
'வேதம்' உரைத்ததால் 'வேதியர்' ஆயினர்!
கதைத்த பொய்களைக் கதைகள் ஆக்கினர்.
புதுப்புதுப் புளுகுகள் 'புராணங்கள்' ஆயின.
அமிழ்ந்தனர் அனைவரும்; அவற்றுள் மயங்கினர்!
தமிழர் உயர்வு வரவரத் தாழ்ந்தது.

இனம்பிள வுண்டதால் ஒற்றுமை இழந்தனர்.
மனமயக் குற்றதால் மானம் இழந்தனர்.
வெள்ளைத் தோலுக்கு அடிமையாய் விழுந்தனர்.
சள்ளைகள் மிகுந்தன; சண்டைகள் எழுந்தன!
சேரனைச் சோழனும், சோழனை மாறனும்
ஓராது போர்செய்து ஒழித்துக் கட்டினர்!

அறந்தலை உலகில் மறந்தலை நின்றது!
சிறந்த தமிழர் சிதைந்துவே றாயினர்.
தமிழன் குடுமியைத் தமிழனே உலுக்கினான்;
தமிழன் முதுகில் தமிழனே குத்தினான்!

'மறையோர்' அவற்றை 'மறைந்து' செய்தனர்.
'வேதியர்' அதுவே 'வேதம்' என்றனர்.
அன்று தொடங்கி அடிமுதல் இழிந்தே
இன்றைய உலகம் ஏமாற்று உலகமாய்
மிளிர்ந்தது தம்பி!—மேனி எல்லாம்
குளிர்ந்ததா? இல்லை; கொதிப்புற் றதடா!
என்ன நினைக்கிறாய்? —எதிர்கால உலகை
இன்னும் இழித்திட எண்ணுகின் றாயா?
அல்லது உயர்த்திட ஆர்வமுற் றாயா?
சொல்;உலகு உனக்குச் சொந்தந் தம்பி!

'சாதிக் குப்பையைச் சாம்ப லாக்கு;
பாதியை அறிவுப் பயிருக்கு உரமிடு!
மீதியை ஒற்றுமை மேன்மைக்கு உரமிடு!
இனமும் ஒன்றுதான்; இறையும் ஒன்றுதான்!
மனமும் ஒன்றுதான்; மக்களும் ஒருவரே!
இறைபல இருந்ததால் மதம்பல விருந்தன.
மதம்பல விருந்ததால் குலம்பல வெழுந்தன!
குலம்புல வெழுந்ததால் கொடுமைகள் நிறைந்தன.
உலகம் எல்லாம் ஒருகுலம் என்னும்
உயர்ந்த கொள்கைக்கு உரமிட்டு வளர்க்க!
அயர்வின்றி உழைக்க! ஆக்கம் உறுதி.
உழைப்பிலார் சேர்த்த உடைமையை உலுக்குக!
உழைப்போர் இழந்த உடைமையை மீட்க!
வயிறு காயும் வறுமையைக் கொல்க!
உயிருவந் தூட்டும் உழவரைப் பேணுக.
பொதுமை உலகம் புதுக்கிடும்
புதுமை நினைவொடு புறப்படு இளைஞனே!


## தமிழ்ச்சிட்டு, கடலூர்-1

(தனித்தமிழ் சிறுவர் கலையிதழ்)

### மாற்றப்பட்ட உறுப்பினர் கட்டணங்கள்.

| | | உள்நாடு. | வெளிநாடு. | கொழும்பு. |
|---|---|---|---|---|
| ஆண்டுக்கட்டணம் | உருபா | 3-00 | 5-50 | 4-00 |
| தனியிதழ் | ,, | 0-25 | 0-45 | 0-35 |

(அரையாண்டுக் கட்டணம் இல்லை)

ஓரிதழுக்கு 50 காசு மேனி முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் எழுதிக் கேட்க!




தாய்க்கழுதை இவ்வாறு
    தன்னைத் தனிவிட்டுப்
போய்க்குதித்துத் தன்னுயிரைப்
    போக்கிய அக் காட்சியினைக்
கண்டிருந்த காளையண்ணன்
    கல்லாய்ச் சமைந்தபடி,
பண்டிருந்த தன்னிலையும்,
    பாழுமொரு மாந்தனிடை
வந்தபின்னைத் தான்பட்ட
    வல்லடிமை வாழ்வினையும்,
நொந்து மனம்வெறுத்து
    நொய்ந்த துயர்நிலையில்
தன்போலும் துன்புற்ற
    தாய்க்கழுதை கண்டதையும்,
முன்பது தான் பட்ட
    முழுத்துயரைச் சொன்னதையும்,
கற்ற கதையளந்து
    காட்டுக்குக் கூட்டிவந்து
உற்ற துணையாய்
    உவந்துநிற்கும் வேளையிலே
நம்பிவந்த தன்னை
    நடுக்காட்டில் விட்டுவிட்டே
அம்புபோல் நீரில்பாய்ந்(து)
    ஆவி துறந்ததையும்,

ஒன்றென்றாய் எண்ணி,
ஒருசேர நீர்வடித்து,
நின்றிருந்த வாறே
நெடுநேரம் ஓட்டியதாம்!

கால்சோர, வாய்சோர,
காதோடும் கண்சோர
வால்சோர, மெய்சோர
வான்துயரங் கொண்டபடி,
காளை இனிவாழுங்
காலத்தை எண்ணியதே!
"வேளை சரியில்லை;
வீழ்ந்துயிரை மாய்த்திடலும்
ஆணுக் கழகில்லை!
அப்படியே மீண்டும்போய்
வீணுக்கு மாந்தரிடை
வீழ்வதுவோ? சீ! சீ! சீ!

"ஆனாலும் செய்வதென்ன?
ஆடவரே என்றாலும்–
வானளவு பேராற்றல்
வாய்த்தவரே என்றாலும்–
துன்னத் துரும்பும்
துணையாகக் கொள்ளாரேல்
சின்ன வினையேனும்
செய்தற் கியலாரே!

"அந்தோ! கழுதையம்மை
ஆண்பிறவி இல்லெனினும்
சிந்தாத நல்லவுள்ளம்!
சீர்குலையா நல்லொழுக்கம்!

"நல்லுளமும் நல்லொழுங்கும்
நற்றுணையாய் வாய்த்துவிடின்
தொல்லுலகை வெல்வதற்கும்
தோது பிறவாதோ?

# பயன்மொழிகள்.

" மற்றவனின் வாழ்வோடு ஒப்பிட்டுப் பார்க்காமல் உன் வாழ்க்கையை நீ துய்க்க வேண்டும். " கொண்டார் செட்டு.

" நல்ல குடும்பத்தைப் போன்ற பள்ளிக்கூடம் வேறு இல்லை! ஒழுக்கமிக்க பெற்றோர்களைப் போன்ற ஆசிரியர்களுமில்லை. "

—காந்தியடிகள்.

" எப்போது? எங்கிருந்து? ஏன்? எப்படி? இந்த வினாக்களிலேயே எல்லாப் பட்டாங்குகளும் அடங்கியிருக்கின்றன. '

—சீபெர்ட்டு.

" சாவு நேரும் என்று அச்சம் காட்டி என்னை எந்தத் தவறும் செய்யும்படி எவருமே செய்ய முடியாது. அப்படித் தவறு செய்வதை விடச் சாவதை நான் விரும்புகிறேன். " —சாக்கிரடீசு

" தன் சுடர் எரிந்து கொண்டிருந்தாலன்றி ஒரு விளக்கால் இன்னொரு விளக்கை ஏற்றிவைக்க முடியாது. " —தாகூர்.

---

(முன்பக்கத்தொடர்ச்சி)

ஆய்ந்தெடுத்த அத்துணைபோல்
ஆரினிமேல் வாய்ந்திடுவார்?
ஏய்ந்த ஒருதுணையும்
இன்றிழந்தோம்—" என்றுபல
தோய்ந்த நினைவுகளால்
துன்புற்ற காளையண்ணன்,
பாய்ந்த கழுதை
பதைபதைத்துச் செத்ததனைப்
போய்ப்பார்க்கும் எண்ணத்தோ(டு)
ஓடைப் புறத்தேபோய்
வாய்ப்பாகக் கீழ்க்குனிந்து
வாய்பிளக்கப் பார்க்கையிலே,
முட்டி நனையா
முழங்கால்நீர் ஓட்டத்தில்
பெட்டைக் கழுதை
பிழைத்திருக்கக் கண்டதுவே!

(தொடரும்)

"மாந்தனே உயிரினங்களுள் சிறந்தவன். அந்தச் சிறப்பை அவனுக்குத் தருவது அவனது எண்ணும் ஆற்றல். அதை முழுவதும் வளர்த்துக்கொள்வதே அவன் பிறவிப் பயனை அடைவதற்குத் திறவுகோல்."
—அரிசுடாடில்.

"எது உண்மை என்பதைக் கண்டுபிடித்தல், நன்மையான பணி செய்தல் ஆகிய இரண்டும் மிக இன்றியமையாத குறிக்கோள்களாகும்."
—வால்டேர்.

"கருத்து நிறைந்த செயலில் நாட்டங்கொண்டவர்கள் விரைவு கொள்ளார். உறுதி குலையமாட்டார்கள். அவர்கள் நரம்பு தளராது. உடல்நலம் கெடாது. கருத்தெல்லாம் பொருள் பொதிந்திருக்கும். செயலும் பொருத்தமாய் இருக்கும்."
—கோப்பன் கோவர்.

0 நீ மற்றவர்களின் பட்டறிவைப் பயன் படுத்திக்கொண்டால் ஒழிய அறிவைப் பெறுவதற்காக உன்னுடைய வாழ்நாள் முழுவதும் செலவழிக்க வேண்டிவரும். அதன்பின் செயலாற்ற உனக்கு அகவை பற்றாது போய்விடும்.
—உருசுவெல்ட்டு

0 மலரையும் வண்ணத்துப் பூச்சியையும் அவற்றின் தோற்றத்தைப் பார்த்து மதிப்பிடு. மாந்தனை அவ்வாறு எடை போடாதே!
—தாகூர்.

0 கூரை நன்கு அமையாத வீட்டில் மழை புகுவது போலவே, நன்னெறி பயிற்சி பெறாத மனத்தில் அவா நுழைந்து இடம் பெறுகிறது.
—புத்தர்.

0 உண்மையுள்ளவனுக்குக் கவலையில்லை! அறிவுள்ளவனுக்கு மயக்கமில்லை! துணிவு உள்ளவனுக்கு அச்சமில்லை!
—சீனப் பழமொழி,

0 அறிவை நாம் விலைக்கு வாங்கிவிடலாம். ஆனால் உணர்ச்சி. அன்பு, பண்புகளை விலைக்கு வாங்க இயலா.
—இலவல்.

0 கெட்ட நெறிக்குச் சோம்பலே கரணியம்.
—அக்பர்.

0 புரட்சியின் பட்டாங்குகளையும், முறைகளையும் நீ அறிய விரும்பினால் புரட்சியில் நீ பங்கெடுத்தே ஆகல் வேண்டும். உண்மை அறிவு எல்லாமே நேரடி பட்டறிவிலிருந்துதான் பிறக்கின்றன.
—மா–சே–துங்.

தொகுப்பு: 'கதிரொளி' சேரன்மாதேவி.

# தெரிந்து கொள்ளுங்கள்

0 மாந்தனின் உடல் குருதியில் உள்ள சிவப்பணுக்கள் ஏறத்தாழ 50 இலக்கம் சேர்ந்தால், அதன் பருமன் 1 கன நுண் சீரடி (மி. மீ.) ஆகுமாம்.

0 சிவப்பணுவின் குறுக்களவு 0 008 நுண்சீரடியாகும்.

0 குருதியில் வெள்ளை யணுக்களைவிட, 500 மடங்கு மிகுதியாகச் சிவப்பணுக்கள் உள்ளன.

0 நம் உடலின் எடையில் 1/13 பாகம் குருதி உள்ளது.

0 நாம் ஒரு நிமையத்துக்கு 14 முதல் 20 தடவை மூச்சு விடுகிறோம்.

0 நாம் ஏறத்தாழ 400 கன நூற்றுச்சீரடி (க. செ. மீ.) பருமனுள்ள காற்றை உட்கொள்ளுகிறோம்.

0 ஏறக்குறைய 1600 கன நூற்றுச்சீரடி (க. செ. மீ,) அளவு காற்று நுரையீரலில் சேமித்து வைக்கப்படுகிறது.

0 நாம் உட்கொள்ளும் காற்றில் 21 விழுக்காடு உயிர்வளி (Oxygen) சேர்ந்துள்ளது. வெளிவிடும் காற்றில் 16 விழுக்காடு மட்டுமே யுள்ளது.

0 மாந்தன் நாளொன்றுக்கு, ஏறத்தாழ $1\frac{1}{2}$ முதல் 2 சீர்க்குடுவை (இலிட்டர்) சிறுநீரை வெளியேற்றுகிறான். அச்சத்தின் பொழுது சிறுநீர் அளவு மிகும்.

0 நம் முதுகுப்புறத் தண்டு வடத்தின் நீளம் ஏறத்தாழ 45 நூற்றுச் சீரடிகள் (செ. மீ).

0 20,000 நுண்ணுயிரிகளை (பாக்டீரியா) அடுக்காக வைத்தால், 1 நூற்றுச்சீரடி (செ. மீ.) நீளம் இருக்குமாம்.

0 ஆசியாவின் மொத்தப் பரப்பளவு 1,63,08,000 சதுரக்கற்களாகும்.

0 1881-இல் இந்தியாவின் மக்கள் தொகை 25 கோடியாகும்.

0 உலகிலேயே மிகப்பெரிய திரைப்படக் கொட்டகை, நியூயார்க்கிலுள்ள "இராக்சி" (Roxy) ஆகும்

0 உலகிலேயே பெரிய பூங்கா "மஞ்சள்கல் தேசியப் பூங்கா" (Yellowstone National Park) ஆகும். இஃது அமெரிக்காவிலுள்ளது.

0 உலகிலேயே உயரமான அணை "போல்டர் அணை" (Boulder Dam) ஆகும். இதுவும் அமெரிக்காவில் உள்ளது

0 உலகிலேயே பெரிய புகைவண்டி நிலையம் நியூயார்க்கிலுள்ள "கிரேண்டு சென்ட்ரல் தெர்மினல்" என்பதாம்.

தொகுப்பு: நத்தம்–இளஞ்சித்திரன்.




## சேம்சு கார்பீல்டு

-நத்தம்-இளஞ்சித்திரன்.

செந்தமிழ்ச் சிட்டுகளே!

'அறிவுடையார் எல்லா முடையார்' என மொழிந்த வள்ளுவனார், 'உடையர் எனப்படுவது ஊக்கம்' எனத் தெளிவாகக் கூறினார். அத்துடன் முயற்சி யிருந்தால் முன்னேற முடியுமாதலால் 'முயற்சி திருவினையாக்கும்' என்றும் அறிவுறுத்தியுள்ளார். ஊக்கம், முயற்சி, அறிவு இம்மூன்றும் பெற்று, குடிசையில் பிறந்த ஒருவர் கோமகனாக விளங்கினார். அவர்தான் சேம்சு கார்பீல்டு.

இவர் அமெரிக்காவில், கியூபெக் எனும் ஊரில், ஆபிரகாம் கார்பீல்டு என்ற குடியானவருக்கும், அவர் மனைவி எலிசாவுக்கும் மகனாக 1831-இல் நவம்பர் 19-ஆம் நாள் பிறந்தார். சேம்சு 4 அகவை நிரம்பியதும், பக்கத்து ஊரில் உள்ள பள்ளிக்குச்சென்று ஒழுங்காகக் கல்வி பயின்றார். பள்ளியில் ஆசிரியரிடம் கேள்விகள் கேட்பதே இவர் வேலை. இதன் மூலம்தான் இவர் அறிவு வளர்ந்தது. ஐயம் எதையும் மனத்தில் வைத்துக்கொள்ள மாட்டார். சேம்சு மாரிக்காலத்தில் பள்ளிசென்று கல்வி பயில முடியாமல் போயிற்று. அந்த இடைக்காலத்தில் பயிர் வேலைகளைச் செய்துவந்தார். பின் இவர் ஊரிலேயே பள்ளி ஒன்று நிறுவப்பட்டது. அங்குச் சென்று கல்வி கற்கத் தொடங்கினார். இவர் ஒருநாள் ஆசிரியரால் போடமுடியாத கணக்குக்கு விடை கண்டார். இஃதொன்றே இவரது கூரிய அறிவுக்குச் சான்றாகும். இவர் எந்தச் செயலையும் பிறர் உதவியின்றிச் செய்யும் ஊக்கமுடையவர். 'என்னால் முடியாது' என்று எச்செயலையும் மனம் தளர்ந்து விட மாட்டார். செய்வனவற்றைத் திருந்தச் செய்து வந்தார்.

சேம்சுக்குப் பன்னிரண்டு அகவை நிரம்பியது. இவர் இடிரிட் என்பவருடன் ஓய்வு நேரங்களில் தச்சுவேலை செய்தார். இவரது திறமை, சுறுசுறுப்பைக் கண்ட பார்டன் (Barton) என்பவர், தம் உப்புக்கிடங்கில் பணிபுரிய இசைவு தந்தார். சேம்சு வேலைசெய்தபின் ஓய்வுநேரத்தில் நூல்களைப் படிப்பார். ஒருநாள் சேம்சு படிப்பதைக் கண்ட, பார்டனின் மகள், 'கூலிக்காரனுக்குப் படிப்பும் வேண்டுமா?' என்று இகழ்ந்தாள். உடனே சினமுற்று அவ் வேலையினின்று விலகினார். பிறகு நியூபர்க்கு (Newburk) என்னுமிடத்தில் மரம்வெட்டும் வேலையில் சேர்ந்தார். கல்வி கற்க ஆவல்கொண்ட சேம்சு பணம் சேர்த்தார்.

பின் செசுடர் உயர்நிலைப்பள்ளியில் சேர்ந்து படிக்கத்தொடங்கினார். இவர் ஆசிரியர்கள் போற்றுமளவிற்கு ஒழுக்கத்துடன் நடந்து கொண்டார். அவ்வமயம் உலுக்ரீசியா ருடால்பு (Lucretia Rudolp) என்ற பெண்ணொருத்தி, அவருடன் படித்து வந்தாள். அவளது நன்னடத்தையைக் கண்ட சேம்சு, அவளுடன் பழக ஆரம்பித்தார். கார்பீல்டு கல்லூரியில் பயின்ற காலத்தில், அமெரிக்காவில் இருந்த அடிமை மக்களை விலங்குகள்போல் நடத்தும் வழக்கத்தைக் குறித்துச் சொற்போர் நிகழ்வதுண்டு. அவ்வாறு சொற்பொழிவாற்றும்போது, 'அடிமைகொள்ளும் வழக்கம் அறமன்று' என்று தக்க கரணியங்களைக் காட்டி, மாறுபட்ட கருத்தினரும் வியக்கும்படி, கண்டித்துப் பேசினார். பள்ளிப் படிப்பு முடிந்ததும் வில்லியம்சு கல்லூரியில் பயின்று 1856-இல் பட்டம் பெற்றார். இவர் கைக்கொண்ட பண்புகள் ஊக்கம், முயற்சி, வாய்மை, தூய்மை என்பனவாம்.

கார்பீல்டு தம் நண்பர்களின் விருப்பத்தால், ஐராம் (Hiram) பள்ளித் தலைவராகப் பதவியேற்றார். மாணவர்களிடம் குறை கண்டால் இன்மொழிகளால் எடுத்துக் கூறித் திருந்தச் செய்வார். மாணவர்களின் ஐயங்களை அவ்வப்போது போக்குவார். கார்பீல்டு கல்வி, அலுவல் நிலையில் தம்மைத் தகுதியாக்கிக் கொண்டதால், முன்பே செய்த முடிவுப்படி, 1858-இல் உலுக்ரீசியாவைத் திருமணம் செய்து கொண்டார்.

பின் அரசியல் வாழ்வில் இறங்கினார். அப்போது சிலகாலம் படைத்தலைவராகப் பணியாற்றினார். ஒருகால் மிடில்கிரீக் (Middle Greek) என்னுமிடத்தில் போர் நிகழ்ந்தது. அப்போரில் வெற்றி பெற்றார். மக்களின் விருப்பத்திற்கிணங்க, கார்பீல்டு மேலவை

(SENATE)க்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1881-ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் நான்காம் நாள், அமெரிக்க நாடுகள் ஒன்றிப்பின் குடியரசுத் தலைவராய்ப் பதவி யேற்றார். குடியரசுத் தலைவராய் விளங்கியதைக் கண்டு அமெரிக்க மக்களிற் பெரும்பாலோர் அக மகிழ்ந்து போற்றினராயினும், சிலர் 'குடிசையில் வாழ்ந்தவனுக்கு வளமான வாழ்வா?' எனத் தூற்றினர்.

கார்பீல்டு பதவியேற்ற நான்கு மாதங்களில் செய்யவேண்டுவன வற்றைக் குறைவறச் செய்தார். ஒருநாள் தம் பயணத்திட்டப்படி, மாநிலங்களைச் சுற்றிவரத் தம் செயலருடன புகைவண்டியில் பயண மானார். அப்போது கார்பீல்டு தீயவன் ஒருவனால் சுடப்பட்டார். அவர் விரைவாக வெள்ளை மாளிகைக்குக் கொண்டுவரப்பெற்று, மருத்துவம் செய்யப்பெற்றார். சேமசு கார்பீல்டு பிழைத்துக்கொள்வாரெனப் பல ரும் நம்பினர். மருத்துவரின் அறிவுரைப்படி உப்பங்காற்று வீசும் கடற்கரை யருகிலுள்ள ஓர் ஊருக்குக் கொண்டு போகப்பட்டார். அங் குச் செப்டம்பர்த் திங்கள் 19-ஆம் நாள் இரவு இவ்வுலக வாழ்வை நீத்தார்.

அறிவாற்றலாலும், அரும்பெரும் பண்புகளாலும் முன்னேறிக் குடியரசுத் தலைவராய் விளங்கிய சேம்சு கார்பீல்டு மாந்தருள் மாணிக்கமாக விளங்கினார். அவர் எச்செயலையும் இழிவாகக் கருதாத வர். காலந்தவறாமல் கடமையைச் செய்யும் கருத்துடையவர். மனச் சான்றின்படி நடக்கும் மாண்புடையவர்.

கார்பீல்டு தம் தெளிந்த அறிவால் கண்ட உண்மைகள், இளை ஞர்களின் உள்ளத்தில் பதியவைக்க வேண்டிய முத்துமொழிகளாகும்.

அவையாவன:

"இளைஞர்கள் தம் வாழ்க்கையில் எதிர்பாராத நிகழ்ச்சி ஏற்பட்டு திடீரென்று முன்னேற்ற மடையக்கூடும் என்று எண்ணுவது தவறா கும்."

"ஒரு மாணவன் முதலில் தன்னை உணர வேண்டும். பிறகு தன் உறவினர், ஊரார், நாட்டினர் முதலியவர்களுக்கும் தனக்கும் உள்ள தொடர்பை அறியவேண்டும்."

"செல்வம் என்பது தன் முயற்சியால் வந்ததாக இருக்கவேண் டும்."

"ஒருவருடைய பண்பு என்பது அவருடைய இயல்பும் பழக்க மும் சேர்ந்து உண்டாவதாகும்."

சிட்டுகளே! நீங்களும் சேம்சு கார்பீல்டுபோல் முயன்று கல்வி கற்று, ஊக்கமும் உறுதியும்பெற்று, உங்கள் தாய்நாட்டிற்கு ஆவன செய்து உய்வீர்களாக! 0

# செருமனியில்

# மூன்று நிமையத்திலே......!

[27 இலக்கம் உருபா மதிப்புள்ள பொருட்கள், அ∴தாவது]

1. 42 கல்லெடை (Ton) பைஞ்சுதை.
2. 15,000 குடுவை (இலிட்டர்) கலங்கல் கன்னெய்,
3. 100 சதுர 'மீட்டர்' படச்சுருள்.
4. 300 ஆயிரம்சீரெடை (கிலோகிராம்) செயற்கை இழைகள். (2,100 சட்டைத்துணி செய்யப் போதுமானவை.)
5. 3 இணை படுக்கையறைப் பொருள்கள்.
6. 4 தையல் இயந்திரங்கள்.
7. 9 மிதி வண்டிகள்.
8. 10 புகைப்படக் கருவிகள்.
9. 15 உந்துவண்டிகள்.
10. 18 வானொலிப் பெட்டிகள்.
11. 87 கடிகாரங்கள்.
12. 3,480 காலுறைகள்.
13. 13,632 சதுர 'மீட்டர்' சவளிகள் (4 545 முழு உடுப்புகள் தைக்கப் போதுமானவை) உருவாக்கப்படுகின்றன.

தொகுப்பு: வெ. சனகன்.

## சப்பானியர் எழுதும் முறை.

–நாற்றமிகு–செம்பியன்.

சப்பானியர்கள் அஞ்சல்கள் எழுதி அவற்றில் முகவரி எழுதுங்கால் முதலில் மாநிலத்தின் பெயர், பின் மாவட்டத்தின் பெயர், அடுத்து நகரத்தின் பெயர், அப்புறம் வீதியின் பெயர், பின்னர் வீட்டு எண், கடைசியில் ஆளின் பெயர் என நம் நாட்டு வழக்கத்தை அப்படியே தலைகீழாகப் பயன்படுத்தி எழுதுகின்றனர்.

நம் நாட்டில் இயற்பெயர் முதலிலும், பின்னால் குடும்பப் பெயரும் அமைந்திருக்கும். ஆனால் சப்பானில் மாறாகக் குடும்பப்பெயர் முன்பும், இயற்பெயர் பின்னும் உள்ளன. 'சவகர்லால் நேரு' என்பது சப்பானில் 'நேரு சவகர்லால் என்று வழங்கும்.

சப்பான் மொழியில் புத்தகங்கள் எல்லாம் பெரும்பாலும் கடைசியிலிருந்தே தொடங்கும்.

# நினைவில் நிறுத்துங்கள்.

1. சுறவம் 1. தமிழர் திருநாள்–சனவரி-14
2. சுறவம் 2, திருவள்ளுவர் திருநாள்–சனவரி-15
3. சுறவம் 19, பம்மல் சம்பந்தர் பிறப்பு–பிப்ரவரி-1
4. சுறவம் 25 மொழிஞாயிறு பாவாணர் தோற்றம்–பிப்ரவரி-7
5. கும்பம் 8, உ. வே. சாமிநாதர் நினைவுநாள்–பிப்ரவரி-19
6. மீனம் 15, ந. மு. வேங்கடசாமி (நாட்டார்) நாள்–மார்ச்சு-29
7. மீனம் 28; மனோன்மணியம் சுந்தரனார் தோற்றம்–ஏப்ரல்-10
8. மேழம் 17, பாவேந்தர் பாரதிதாசன் தோற்றம்–ஏப்ரல்-30
9. மேழம் 10, ,, ,, மறைவு–ஏப்ரல்-23
10. மேழம் 18, கா. சுப்பிரமணியர் (பிள்ளை) மறைவு–மே-1, (மே நாள்)
11. விடை 1. இளங்கோவடிகள் நாள்–மே-15
12. ஆடவை 31, மறைமலையடிகள் தோற்றம்–சூலை-15
13. மடங்கல் 30, ,, மறைவு–செப்டம்பர்-15
14. கடகம் 4, கவிமணி தோற்றம்–சூலை-20
15. மடங்கல் 10, திரு. வி. க. தோற்றம்–ஆகஃச்டு-26
16. கன்னி 1, ,, ,, மறைவு–செப்டம்பர்-17
17. மடங்கல் 20, வ. உ. சி. தோற்றம்–ஆகஃச்டு-26
18. மடங்கல் 30, அறிஞர் அண்ணா தோற்றம்-செப்டம்பர்-15
19. சுறவம் 21, ,, ,, மறைவு–பிப்ரவரி-3
20. மடங்கல் 31, பண்டிதமணி-கதிரேசனார்-தோற்றம்-செப்டம்-17
21. மடங்கல் 26, பாரதி நினைவுநாள்–செப்டம்பர்-11
22. கன்னி 1, பெரியார் தோற்றம்–செப்டம்பர்-17
23. கன்னி 16. காந்தியடிகள் தோற்றம்–அக்டோபர்-2
24. கன்னி 19, இராமலிங்க அடிகள் தோற்றம்–அக்டோபர்-5
25. துலை 17, பரிதிமாற்கலைஞர் மறைவு-நவம்பர்-3
26. நளி 26, பாரதி மறைவு-திசம்பர்-11
27. சிலை 15, பா. வே. மாணிக்கம் (நாயக்கர்) மறைவு-திசம்பர்-30
28. சுறவம் 1, தொல்காப்பியர் நினைவுநாள்–சனவரி-14
29. சுறவம் 12, மாணவர் எழுச்சி நாள்–சனவரி-25
30. சுறவம் 17, காந்தியடிகள் நினைவுநாள்–சனவரி-30

---

தொகுப்பு: நா. அம்பாள்-11-ஆம் வகுப்பு—அவிநாசி

(சென்ற இதழ்த் தொடர்ச்சி) தொடர்-3.

# தமிழிலிருந்து ஆங்கிலத்துக்குச் சென்ற சொற்கள்.

(பாவாணர் நூல்களினின்று தொகுத்தவர்:
செங்கிப்பட்டி அர். இராமையன்.)

சுணக்கம்-Slack
சுரும்பு-Drone
சுறவு-Shark
சென்னி-Zenith

சுருங்கு-Shrink
சுருள்-Swirl

சேர்-Derivatives-assert, desert, exert, msert etc.

தக்கணம்-dexter
தட்டளி-totter
தப்பு(அடித்தல்)-tap. dab
தாட்டி(கமாய்)-doughtly
தாவு(இடம்)-topo graphy
திண்-dense
திமிர்-Smear
திருகு-torque
திருப்பு, திரும், திரும்பு } turn

தட்டு-tattoo
தப்பளை, தப்பட்டை-dabble

தாவளம்-tavern,
தாள், தாளு-tolerate
திண்-din
திரி-torch
திருக்கு-trick
தினை(சிறிய)-tiny
தீர்மானம-terminate, determinate

துமி(வெட்டு)-ana tomy dichotomy, epitome etc.
துருத்து-Thrust, extrude, intrude, obtrude, protrude etc.

துர(த்தல்)-drive
துரிசு, துருசு-dross
துருவு-Through
துளை-door

துன்-tun
தூம்பு, தூம்பர்-tube
தொலை, தொலைவு-tele-
tele phone, tele graph, tele-scope etc.
நங்கூரம்-Anchor
நம(த்துப்போதல்)-nam, numbe
நாகம்-Snake
நாடு(தேவை)-need
நாவாய்-Navy, navi gate
நூக்கு-nudge
நெருங்கு-near
நோக்கு-look
பக்கம்-Page

துன்னல்-tunnel
தேவ்-thieve
தொய்கு-del, dell, dale

தோடு(முழுவதும்)-totus, toto, total

நரம்பு-Nerve

நாகு(இளமை)-Nag
நாற்று-Nature

நெற்று-nut
நெருக்கம்-narrow
நோடு(நோட்டமிடு)-note
பக்கு(பை)-bag

# நல்ல நேரமில்லை!

-நாற்றமிகு-செம்பியன்.

நம் தென்னுட்டில் நாம் எங்கேயாவது புறப்படும் பொழுது பூனை குறுக்கே வந்தால், 'நல்ல நேரமில்லை' என்பார்கள். வெளி நாடுகளிலும் அது போன்ற மூடப்பழக்கங்கள் உள்ளன. அவற்றில் சில:

1. அயர்லாந்தில் உப்பைச் சிதறவிட்டால், சிதறவிட்டவரின் தோள்பட்டையில் சிறிதளவு உப்பைத் தூவுவார்களாம். காரணம் உப்பைச் சிதறினால் கலகம் வருமாம். அதைப் போக்கத்தான் சிதறிய வரின் தோள்பட்டையில் உப்பைத் தூவுகின்றனராம்,

2. இங்கிலாந்தில் ஒருவர் புறப்படுங்கால் முயல் குறுக்கே பாய்ந்தால் நல்லதாம், பின்னால் பாய்ந்தால் கெட்டதாம்.

3. இங்கிலாந்தில் கறுப்புப் பூனையைப் பார்த்தால் நல்லதாம். மற்ற வண்ணப் பூனைகள் இடமிருந்து வலமாகப் போனால் அது நல்ல நேரமில்லையாம்.

4. 'சீகல்' பறவையைப் புறப்படும்பொழுது பார்த்தால் ஆங்கிலேயர்கள் மகிழ்கிறார்கள். அது நல்லதற்கு அடையாளமாம்..

5 எவருக்காகிலும் முன் பற்கள் இரண்டுக்கும் இடையில் 6 'பென்சு' நாணயத்தைச் செருகும் அளவுக்கு இடைவெளியிருந்தால், அது செல்வச் செழிப்புக்கு அடையாளம் என ஆங்கிலேயர் நம்புகின் றனர்.

## சொல்ல முடியுமா?

-நாற்றமிகு-செம்பியன்.

நீங்கள் ஒரு பேருந்துவண்டியின் சீட்டுக்கொடுப்பவர். ஒருநாள் உங்கள் பேருந்தில், முதல் நிலையத்தில் 5 அகவை (வயது) உள்ள மூன்று குழந்தைகள், 14 அகவை பள்ளிச் சிறுவர்கள் 9 பேர், 30 அகவை நிரம்பிய 3 பெண்கள், 70 அகவை மதிப்புள்ள கிழவி ஒருத்தி ஏறினார்கள். இரண்டாவது நிலையத்தில் கிழவி இறங்கி விட, 19 அகவை நிரம்பிய 13 கல்லூரி மாணவர்களும், 17, 16 அகவை நிரம்பிய 6 கல்லூரி மாணவர்களும் ஏறினார்கள். மூன்றாவது நிலையத்தில் 5 அகவை நிறைந்த அந்த மூன்று குழந்தைகளும், அவற்றின் தாய்மார்களான 30 அகவை நிரம்பிய மூன்று பெண் களும் இறங்கிவிட்டனர். அந்த நிலையத்தில் 40, 45 அகவையுள்ள ஆண்கள் 11 பேரும், 90 அகவைக் கிழவர் ஒருவரும், 7 பத்து அக வைச் சிறுமிகளும் ஏறினார்கள். என்றால் சீட்டுக் கொடுப்பவரின் அகவை என்ன? சொல்ல முடியுமா?

---

விடை:

என்ன? சொல்ல முடியவில்லையா? உங்கள் அகவைதான். சீட்டுக் கொடுப்போர் நீங்கள்தாமே. முதல் வரியைப் பாருங்கள்.

# உறவுமுறைப் பெயர்கள்.

**தந்தை—** அப்பன் (தமப்பன்–தகப்பன்), அத்தன்–அச்சன், ஆஞான்–ஆஞி, ஐயன், தா, நாயன்.

**தாய்—** அம்மை–அவ்வை, அன்னை–அஞ்ஞை, அத்தி–ஆத்தி–ஆத்தை அச்சி–ஆச்சி, ஐயை, ஆய், தள்ளை.

**மகன்—** புதல்வன். **மகள்—** புதல்வி.

**மக (பொது)—** மகவு, பிள்ளை, சேய், மதலை, கான்முளை (ஒருமை); மக்கள் (பன்மை)

**அண்ணன்—** ஐயன் (தமையன்), ஆயான், அண்ணாட்சி (அண்ணாத்தை) அண்ணாள்வி, தம்முன், மூத்தோன், முன்னோன்.

**தம்பி—** தம்பின்–தம்பி, இளவல், இளையான், பின்னோன்.

**அக்கை—** அக்கைச்சி (அக்கையச்சி), (தமக்கை) தவ்வை (தம் அவ்வை), மூத்தாள், முன்னை, அத்தி–அச்சி.

**தங்கை—** கை, தங்கைச்சி (தங்கையச்சி), செள்ளை. இளையாள், பின்னை, பின்னி.

**அண்ணன் தம்பி(பொது)—** உடன்பிறந்தான்–உடப்பிறந்தான்.

**அக்கை தங்கை (பொது)—** உடன்பிறந்தாள்–உடப்பிறந்தாள்.

**அண்ணன் மனைவி—** அண்ணி, ஆய்ந்தி (ஐயன்தேவி), நங்கை, அத்தாச்சி.

**அக்கை கணவன்—** அத்தான், மாமன்.

**மருமகன்—** மருமான், மருகன், மணவாளப்பிள்ளை.

**மருமகள்—** மருமாள், மருகி, மணாட்டுப்பெண்.

**பெண்கொடுத்தோன்—** மாமன்; **மாமன் மனைவி—** மாமி.

**கணவன்—** ஆண்மகன், அகமுடையான், கண்ணாளன், கொழுநன், கொண்கன், கொண்டான், நாயகன், மணவாளன்–மணாளன், வீட்டுக்காரன்.

**மனைவி—** அகமுடையாள், இல்லாள், நாயகி, பெண்–பெண்டு–பெண்டாட்டி, கண்ணாட்டி, மணவாட்டி, வீட்டுக்காரி.

**கணவன் தம்பி—** கொழுந்தன், **கணவன் தங்கை—** கொழுந்தி.

**கணவன் அண்ணன்—** அத்தான். **கணவன் அக்கை—** நாத்தூண், நாத்தூணாள்.

**மனைவி அண்ணன்—** மூத்த அளியன்; **மனைவி தம்பி—** இளைய அளியன்

**மனைவி அக்கை—** மூத்த அளியாள், அண்ணி.

**மனைவி தங்கை—** *இளைய அளியாள், கொழுந்தி.*

**ஓரகத்தான்—** *ஒர்குடி மணாளன், ஒர்குடியிற்கொண்டோன் (சகலன்)*

**ஓரகத்தி—** *ஓரகத்தாள், ஓர்ப்படி, ஓர்ப்படியாள், ஓர்ப்படைச்சி,*

**தந்தை அண்ணன்—** *பெரியப்பன், மூத்தப்பன், பெரியையா.*

**தந்தை தம்பி—** *சின்னப்பன், சிறிய தகப்பன், சின்னையா.*

**தந்தையுடன் பிறந்தாள்—** *அத்தை (சின்னத்தை, பெரியத்தை)*

**தாயின் அண்ணன்—** *பெரியம்மான், மூத்தம்மான்* } *அம்மாண்டார்*
**தாயின் தம்பி—***சின்னம்மான், இளையம்மான்*

**தாயின் அக்கை—** *பெரியம்மை. பெரியதாய்.*

**தாயின் தங்கை—** *சின்னம்மை, சிறியதாய், தொத்தா, சித்தி (சிற்றாய்), பின்னி.*

**தந்தையின் தந்தை—** *அப்பச்சன், தாதா, தாதை, தாத்தா.*

**தந்தையின் தாய்—** *அப்பச்சி, அப்பாத்தை, அப்பத்தி, அப்பாய்.*

**தாயின் தந்தை—** *அம்மாச்சன்.*

**தாயின் தாய்—** *அம்மாச்சி, அம்மாய், அமிஞை.*

**பெற்றோர் தந்தை** (*பொது*)— *பாட்டன், போற்றி-போத்தி.*

**பெற்றோர் தாய்** (*பொது*)— *பாட்டி.*

**பாட்டன் தந்தை—** *பூட்டன்-முப்பாட்டன், கொள்ளுப்பாட்டன்.*

**பாட்டன் தாய்—** *பூட்டி, கொள்ளுப்பாட்டி.*

**பூட்டன் தந்தை—** *ஒட்டன், சீயான் (சேயான்)*

**பூட்டன் தாய்—** *ஒட்டி, சீயாள் (சேயாள்)*

**மகன் மகன்** }— *பெயரன்—பேரன்.*
**மகள் மகன்**

**மகன் மகள்** }— *பெயர்த்தி-பேர்த்தி.*
**மகள் மகள்**

**பேரன் மகன்—** *கொள்ளுப்பேரன், கொட்பேரன்.*

**பேரன் மகள்—** *கொள்ளுப்பேர்த்தி-கொட்பேர்த்தி.*

**சக்களத்தி**- *(சகக்களத்தி)* என்னும் இருபிறப்புச்சொல்லை(Hybrid) **ஒக்களத்தி** என்றும், **சம்பந்தி** என்னும் வடசொல்லை **உறவாடி** என்றும் *மொழிபெயர்த்துச் சொல்லல் வேண்டும்.*

(பாவாணர்—தமிழ் வரலாறு.)

# அறிவியல் வகை.

Accountancy–கணக்கியல்
Aerology–வளியியல்
Agriculture–உழவியல்
Anatomy–உடற்கூற்றியல்
Anthropology–மாந்தவியல்
Architecture–கட்டிடவியல்
Archaeology–தொல்பொருளாய்வியல்
Astrology–கணியவியல்
Astronomy–விண்ணியல்
Astrophysics–விண்விளங்கியல்–விண்ணியங்கியல்
Bactriology–நுண்ணுயிரியல்
Biochemistry–உயிர்வேதியல்
Biology–உயிரியல்
Botanical geography–நிலைத்திணை நிலவியல்
Botany—பயிரியல்; நிலைத்திணையியல்
Chemistry–வேதியல், இயைபியல்
Chronology–காலவியல்
Civics—குடியியல்
Cosmogony } அண்டவியல்
Cosmology }
Ecology–சூழ்வியல்
Economics–பொருளியல்
Electronics–மின்னியல்
Engineering–பொறியியல்
Entomology–பூச்சியியல்
Epigraphy–கல்வெட்டியல்
Etymology–வேர்ச்சொல்லியல்
Gemology–மணியியல்
Geomorphology–நிலப்புறவியல்
Geology–நிலவியல்
Helminthology–புழுவினவியல்
Herpetology–ஊர்வனவியல்
History—வரலாறு
Horticulture–தோட்டப்பயிரியல்
Human ecology–மாந்தச் சூழ்வியல்
Human geography–மாந்தப் பரப்பியல் (தொடரும்)